**DEPOSITION OF WITNESS**
(Chapter XXIII Code of Criminal Procedure)
IN THE COURT OF DISTRICT MUNSIF CUM JUDICIAL MAGISTRATE,
KODAVASAL

| | | |
|---|---|---|
| Case No. | : | **C.C. No.326/2025** |
| Prosecution witness | : | P.W.3 |
| List of witness | : | L.W.3 |
| Name | : | சுகன்யா |
| Father's /Husband Name | : | பாலசுந்தரம் |
| Village | : | தேதியூர் |
| Taluk | : | குடவாசல் |
| Age | : | 32 |
| Occupation | : | வீட்டுக்குடித்தனம் |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873, 24th day of February 2026.
Both Accused present.

**முதல் விசாரணை**

நான் குடவாசல் தேதியூர் கிராமத்தில் குடியிருந்து வீட்டுக்குடித்தனம் செய்து வருகிறேன். அ.சா.1 எனது அம்மா ஆவார். ஆஜர் எதிரிகளை எனக்கு தெரியும். ஆஜர் எதிரி விஸ்வநாதன் எங்கள் ஊர் நாட்டாமை 2ம் எதிரி ராஜேஷ் நாட்டாமை விஸ்வநாதனின் மகன் ஆவார். எங்கள் இடத்தை எங்களது சித்தப்பாவிடம் விற்றுவிட்டோம். விற்பதற்கு முன்பே மேற்படி இடத்தை நாங்கள் வாழை போட்டிருந்தோம். கடந்த 24.11.2023 ம் தேதி காலை 10.00 மணிக்கு என் அண்ணன் சுதர்சன் மேற்படி வாழைக்கொல்லையில் இருந்து ஒரு வாழை மொட்டை பறித்து வந்துவிட்டார். அதனால் எனது சித்தப்பாவும் சித்தியும் ஆஜர் எதிரியான விஸ்வநாதன் நாட்டாமை என்பதால் அவரிடம் சென்று கூறியுள்ளார். அதனால் எதிரிகள் இருவரும் காலை 11.00 மணிக்கு எங்கள் வீட்டில் வந்து நியாயமாக பேசாமல் எனது அண்ணன் சுதர்சனை தரக்குறைவாக பேசியும் எனது அம்மாவையும் தரக்குறைவாகவும் பேசினார்கள். அதனால் அங்கு உள்ளவர்கள் அப்போது அங்கு வந்து பேசி அனுப்பிவிட்டார்கள். அன்றைய தினம் 06.00 மணிக்கு மேல் எங்கள் வீட்டிற்கு முன்னால் இருந்த கோவிலில் நின்று கொண்டிருந்த எனது அண்ணன் சுதர்சனை எதிரி ராஜேஷ் அடித்துக்கொண்டே எங்கள் வீட்டு வாசலுக்கு வந்தார். அப்போது எனது அம்மாவும் அங்கு வந்துவிட்டார் எனது

அண்ணனை அடித்துக்கொண்டிருந்ததை தடுத்த போது எனது அம்மாவை எதிரி விஸ்வநாதன் கல்லால் நெற்றியில் அடித்துவிட்டார். அதனால் எனது அம்மாவிற்கு நெற்றியலிருந்து இரத்தம் வந்தது உடனே எதிரி ராஜேஷ் கம்பை எடுத்துக்கொண்டு வந்து எங்களை கொல்லாமல் விடமாட்டேன் குச்சிகாரி மகளே தேவிடியா மகளே என தகாத வார்த்தைகளால் திட்டினார் என்றும், எனது அம்மாவிற்கு தலையில் காயம் ஏற்பட்டு சத்தம் போட்ட பிறகு அக்கம் பக்கத்தில் உள்ளவர்கள் வந்ததும் எதிரிகள் இருவரும்அங்கிருந்து ஓடி விட்டார்கள். பின்பு நான் எனது அம்மாவை ஆட்டோவில் அழைத்துக்கொண்டு சிகிச்சைக்காக நன்னிலம் அரசு மருத்துவமனைக்கு சென்றேன். மேற்படி சம்பவம் குறித்து போலீசார் என்னை விசாரணை செய்தார்கள்.

**எதிரிகள் தரப்பில் குறுக்கு விசாரணை** -

நான் திருமணம் ஆகி சென்ற ஊர் பூந்தோட்டம் என்றால் சரிதான். நான் அம்மா வீட்டில் தான் இருந்து வருகிறேன். சம்பவம் நடந்த அன்றே போலீசார் என்னை எனது வீட்டில் வந்து விசாரித்தார்கள். அதன்பிறகு மருத்துவமனையில் வந்து விசாரித்தார்கள். அதன் பிறகு என்னை விசாரிக்கவில்லை. நான் முதல் விசாரணையில் சொல்லியுள்ளதை தான் போலீசார் விசாரணையிலும் சொல்லியுள்ளேன் என்றால் சரிதான். நான் சொல்வது போல் எந்த சம்பவமும் நடைபெறவில்லை என்றாலும் எனது சகோதரர் மீது ஆஜர் 1ம் எதிரி வாழை மொட்டை திருடியது சம்மந்தமாக ரவிச்சந்திரனிடம் போலீசில் புகார் கொடுக்க சொன்னதை மனதில் வைத்துக்கொண்டு எனது தாயார் மூலம் பொய்யான புகார் கொடுத்து அதற்கு ஆதரவாக நானும் எனது சகோதரரும் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. எதிரிகள் அ.சா.1ஐ திட்டவும் இல்லை தாக்கவும் மிரட்டவும் இல்லை என்று சொன்னால் சரியல்ல. ஆஜர் எதிரிகளுக்கும் அ.சா.1க்கு ஏற்பட்ட காயத்திற்கும் எந்த சம்மந்தமும் இல்லை என்றால் சரியல்ல.

**மறுவிசாரணை - இல்லை.**

Taken down by the typist under my dictation in open Court read over to the witness admitted and acknowledged by him to be Correct.

MOHAMED ARSHAD FAREED M

Digitally signed by MOHAMED ARSHAD FAREED M
DN: cn=MOHAMED ARSHAD FAREED M, o=TAMIL NADU STATE JUDICIAL SERVICE, st=Tamil Nadu, c=IN
Date: 2026.02.24 16:03:34 +0530

`

District Munsif -Cum-
Judicial Magistrate,
Kodavasal.